மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

வட இலங்கையில்
ஒரே ஒரு விளம்பர
முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மேபா. யாழ் பீ இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்
புறுமையின் உறைவிடம் செனித்

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

வட இலங்கையில்
ஒரே ஒரு விளம்பர
முகவர்கள்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
மேபா. யாழ் பீ இன்ஸ்
139, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.
புதுமையின் உறைவிடம் செனித்

சுடர் - 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆவணி மீ 8 உ. ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 துல்ஹஜ் பிறை 17 (24-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் - 238

# போராளி அமைப்புகள் மீது இந்திய நிர்ப்பந்தம் இராது

## அமைச்சர்குழு சந்திப்பில் தெளிவு படுத்தப்பட்டதாகத் தகவல்

சென்னை, ஆகஸ்ட். 23

**இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் இந்தியா தமிழ்ப் போராளி அமைப்புக்கள் மீது நிர்ப்பந்தம் எதையும் பிரயோகிக்காது.**

வெளியுறவு அமைச்சர் பி. சிவ்சங்கர் தலைமையில் சென்னைக்கு வந்த அமைச்சர்குழு, தமிழ்ப்போராளிகளிடம் இதனைத் தெளிவாகத் தெரிவித்தது.

இப்படி இந்திய அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

நள்ளிரவு விமானப்பயணம் ஒன்றை மேற்கொண்டு அமைச்சர்கள் சிவ்சங்கர், பூட்டாசிங், சிதம்பரம் ஆகியோர் சென்னைக்கு வந்து முதலமைச்சர் இராமச்சந்திரன் முன்னிலையில் அவரது வாசஸ்தலத்தில் வைத்து தமிழ்ப் போராளிகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர் அல்லவா?

இப்பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் இப்போது வெளிவந்துள்ளன.

இந்திய அரசு குறித்து போராளிகள் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களையும் போராளிகள் குறித்து இந்திய அரசு கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களையும் நீக்குவதாகவே இப்பேச்சுக்கள் அமைந்தன—இப்படி புதுடில்லி அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழரின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்புடைய தீர்வு ஒன்றை ஏற்கும்படி இந்தியா நிர்ப்பந்திக்கும் என்ற தப்பபிப்பிராயம் போராளிகள் மத்தியில் நிலவியது.

தற்போது நடைபெறும் அரச கூட்டணிப் பேச்சுக்களை முறியடிக்கும் விதத்தில் போராளிகள் நடந்து கொள்வார்கள் என்ற அச்சம் இந்திய அரச தரப்பில் நிலவியது.

இரண்டுதரப்பார் மத்தியிலும் நிலவிய தப்பபிப்பிராயங்களை நீக்கவும் பேச்சுக்களாகவே சென்னைச் சந்திப்பு அமைந்தது.

இப்படி புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசு கூட்டணிப் பேச்சுக்களின்போது உருவாகும் யோசனைகள் தமிழரின் அபிலாஷைகளை (4 ஆம் பக்கம் பார்க்க)

### நல்லூர் கோயிலை வட்டமிட்ட ஹெலி

யாழ்ப்பாணம், ஆக 24

நேற்று மாலை நான்கு மணியளவில் அதி உயரத்தில் பறந்துகொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப்பறந்து வந்து நல்லூர் ஆலயத்தின் மீது வட்டமிட்டது.

இதனைக் கண்ட பக்தர்கள் மத்தியில் சிலநிமிட நேரம் பதற்றம் நிலவியது. (இ-10)

## ராஜீவ் - போராளிகள் சந்திப்பு செப்டம்பர் இரண்டாம் வாரத்தில்

புதுடில்லி, ஆக 23

அணிசேரா மாநாடு முடிந்து நாடு திரும்பிய பின்னர் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ்ப்போராளித் தலைவர்களைச் சந்திப்பார்.

வெளியுறவு அமைச்சர் பி. சிவ்சங்கர் சகிதம் பிரதமர், போராளித் தலைவர்களை புதுடில்லியில் அல்லது சென்னையில் வைத்துச் சந்திப்பார் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

செப்டம்பர் இரண்டாம் வாரத்தில் இச்சந்திப்பு இடம் பெறும் சமயம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களும் இலங்கை அரசுத் தலைவர்களுடனான பேச்சுக்களை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பி விடுவர் என்றும் புதுடில்லி அரச வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. (அ-ஐ-எ)

## அரச படைகளை முகாம்களுக்குள் வைத்திருக்க வேண்டும்

### இந்தியா வற்புறுத்தியதாகத் தகவல்

புதுடில்லி, ஆக 24

ஆயுதப் படையினர் (ஷெல் ஏவுவது உட்பட) எதுவித தாக்குதலிலும் ஈடுபடாதபடி முகாம்களுக்குள் வைத்திருக்கப்படவேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை இந்தியா கேட்டுள்ளது.

போராளிகள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் தான் ஈடுபடுகின்றனர் என்று கூறப்பட்டிருப்பதால், ஆயுதப்படையினர் முகாம்களுக்குள் எதுவித தாக்குதலிலும் ஈடுபடாமல் வைத்து இருக்கப்பட வேண்டும் என்று இந்தியா கருதுவதாக, கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் டிக்ஷித் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை சந்தித்தபோது தெரிவித்ததாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சந்திப்புப் பற்றிய விபரம் நேற்றைய சஞ்சிகையில் வெளியாகி இருந்தது தெரிந்ததே. (அ-ஐ-எ)

## மாகாணசபை யோசனைகள்:

# அரசமைப்புக்கு முரணா? சுட்டிக்காட்டினால் திருத்தத்தயார்!

## ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஆக 24

மாகாணசபை யோசனைகளில் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரான அம்சங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டினால் அவற்றை நீக்கிவிட நான் தயாராக இருக்கிறேன்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்தார்.

புளத்சிங்கள என்ற இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி பேசுகையில் மேலும் சொன்னதாவது:

சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே அறிமுகப்படுத்திய பெருமை இலங்கைக்குத் தான் உண்டு. எப்போது, எதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது என்பது எனக்குத் தெரியும். இது பற்றி ஏனையோர் எனக்கு சொல்லித்தர வேண்டியதில்லை.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

## யுத்த நிறுத்தம்: உண்மை நிலை என்ன?

கொழும்பு, ஆகஸ்ட் 24

ஒரு மாத கால யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு போராளிகளும், இலங்கை அரசும் இணங்கியிருப்பதாக வெளிவந்த செய்தி குறித்து இருசாரார் தரப்பிலும் கருத்து வெளியிடப் பட்டிருக்கிறது.

### இலங்கை அரசு

யுத்த நிறுத்தமா? அது பற்றி உத்தியோக பூர்வமாக எதுவித அறிவித்தலும் எனக்குக் கிடைக்கவில்லை.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா அமைச்சரவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்ததாக 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில் அமைச்சரவைப் பேச்சாளர் செய்தியாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில், யுத்த நிறுத்தத்துக்கு இலங்கை தயாராக இருக்கிறது— என்று தெரிவித்தார். (உ-ஐ-எ)

### போராளிகள்

உத்தியோக பூர்வமான, அல்லது உத்தியோக பூர்வமற்ற யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சே இடையாது.

இப்படி ஈழம் தேசிய விடுதலை முன்னணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் பற்றி மத்திய அமைச்சர் குழு சென்னையில் போராளிகளுடன் பேச்சுக்கள் நடத்தியதாக கூறப்படுவதை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் நிராகரித்தார் என்று ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ஆனால் யுத்த நிறுத்தம் குறித்து இணக்கப்பட்டதாகவோ, வாக்குறுதி கொடுக்கப்பட்டதாகவோ போராளிகள் தரப்பில் தெரிவிக்கவில்லை என்றும் மேற்படி செய்தி ஸ்தாபனம் மேலும் தெரிவித்தது.

போர் நிறுத்தம் பற்றி இந்தியாவில் டைம்ஸ் ஓவ் இந்தியா பத்திரிகை மட்டுமே செய்திவெளியிட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ-ஐ-எ)

### இன்று நல்லூரில்

மகோற்சவம்

15 ம் திருவிழா

காலை 10 மணிக்கு வெள்ளிமயில். வெள்ளி அன்னம் (உள்வீதி)

மாலை 5 மணிக்கு வெள்ளி ஆட்டுக்கடா, ஆட்டுக்கடா (இரண்டு) (வெளிவீதி)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்து வரும் தொடர் சொற்பொழிவில் 'மரண இன்பம்'' என்னும் பொருள் பற்றி ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா அவர்கள் சொற்பெருக்காற்றுவார்.

மாலை 6. 30 மணிக்கு ஆலய மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திரு வை. நித்தியானந்த சர்மா அவர்களால் கந்த புராண தொடர் பிரசங்கம் நடத்தப்பெறும்.

### சுபநேரம்

24—08—1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:

9 05 முதல் 10 35 வரை

ராகுகாலம்:

4. 35 முதல் 6. 05 வரை

இவ பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# நேருக்கு நேர் மோதப் போராளிகள் தயார்

## இராணுவ அதிகாரி தகவல்

திருகோணமலை, ஆக. 24

நேருக்குநேர் மோதுவதற்குத் தீவிரவாதிகள் (போராளிகள்) தயாராகி வருகிறார்கள்.

எமது வீரர்களுக்கும் நவீன ஆயுதங்கள், பயிற்சி வழங்கப்பட்டுள்ளன நாமும் நேரடி மோதலுக்குத் தயாராக வேண்டும்.

இப்படி இராணுவ உயர் அதிகாரி லெப்டினன்ட் கர்னல் எஸ். பி. எக்கநாயக்கா சொன்னார்.

புதிதாகப் பயிற்சி பெற்று வெளியேறிய நாவற் சிப்பாய்களின் அணிவகுப்பு மரியாதை திருமலை பிளன்டன் பொயின்ட் என்னும் இடத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

அந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே இராணுவ அதிகாரி எக்கநாயக்கா இதனைத் தெரிவித்தார். (அ-எ-50)

## கோட்டைக்கு நேற்று நவீன ரக ஆயுதங்கள்

### மண்டைதீவு வழியாக வந்தன

யாழ்ப்பாணம், ஆக 24

யாழ் கோட்டை முகாமிற்கு நவீனரக ஆயுதங்கள் ஹெலிகள் நேற்று கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

இதேவேளை பயிற்சி பெற்ற பல சிப்பாய்களும் நேற்று கோட்டை, மண்டைதீவு இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரியவருகிறது.

காலைமுதல் மாலை வரை சிப்பாய்களையும் ஆயுதங்களையும் ஏற்றி இறக்கும்பணியில் இரண்டு ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டன என்று கூறப்படுகிறது.

கப்பல்கள்மூலம் பலாலி இராணுவ முகாமுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயுதங்களே சிப்பாய்களு (4 ஆம் பக்கம் பார்க்க)

## தரையிறங்க முயன்ற ஹெலிமீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக, 24

நேற்று மாலை யாழ். கோட்டை முகாமிற்குள் தரையிறங்க முயன்ற ஹெலிக்கொப்டரை நோக்கி போராளிகள் தாக்குதல் நடத்தினர். இதனால் ஹெலிகொப்டர் தரையிறங்கும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றது.

இதன்பின்பு கோட்டையில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (உ-10)

### முறிகண்டியில் தாக்குதல்


யாழ்ப்பாணம் ஆக 24

வெள்ளிக்கிழமையன்று முறிகண்டியில் ரோந்து வந்த இராணுவத்தை நோக்கி தாம் தாக்குதல் நடத்தியதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

இது தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

வெள்ளி மாலை 4 மணிகளவில் மாங்குளம்முகாமிலிருந்து 8 கவச வாகனங்கள், எக்விட்ரக், டெலிக்கா வான் ஆகியவை சகிதம் இராணுவத்தினர் ரோந்து வந்து கொண்டிருந்த சமயம் முறிகண்டியில் வைத்து நாம் தாக்குதல் நடத்தினோம்.

ஒன்றரை மணி நேரம் மேற்கொண்ட சமர் மோதலின் பின் இராணுவம் இழப்புகளுடன் கிளிநொச்சி முகாமினுள் புகுந்து கொண்டது. எமது தரப்பில் எதுவித இழப்புகளுமில்லை (உ)



வெள்ளிக்கிழமையன்று கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டினால் மரணமடைந்த ஆசிரியர் வி இராஜதுரையின் (60 வயது) சடலம். ஷெல் குண்டினால் மரணமடைந்த மணமகள் இரத்தினம் உதயசூரியனின் உறவினர் இவர் (உ)

### முச்சந்தி முனி



என்ன, கலியாண வீடு கலை மரண வீடுகளாக்கிற சாதனையும் இப்ப நடந்து கொண்டிருக்குது பாத்தியே. எல்லாத்துக்கும் ஒரு முடிவு.. விடிவு வராமலா போகும்..!

## கோட்டை முகாமை அகற்றக்கோரி

# யாழ். நகரில் புதன்கிழமை மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஆ 24

யாழ் கோட்டையில் இருந்து இராணுவ முகாமை அகற்றுமாறு கோரும் பிரமாண்டமான மௌன ஊர்வலம் ஒன்றை நடத்த மக்கள் நடவடிக்கைக்குழு தீர்மானித்துள்ளது,

எதிர்வரும் புதன்கிழமை காலை இந்த ஊர்வலம் நடத்தப்படும்.

காலை 8 மணிக்கு மௌன ஊர்வலம் யாழ் ரயில் நிலையத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பமாகும்.

பல வீதிகளூடாகச் சென்று இறுதியில் யாழ் செயலகத்தை மௌன ஊர்வலம் அடையும்.

அங்கு அமைந்த யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் ஊர்வல அமைப்பாளர்கள் மகஜர் ஒன்றைக் கையளிப்பார்கள். (உ-எ)

# கும்புறுப்பிட்டி கிராம சேவையாளர் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஆக 24

திருகோணமலைத் தெகுதியில் கும்புறுப்பிட்டி கிராமசேவையாளராகப் பணியாற்றி வந்த திரு. வி நடராசா நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நிலாவெளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சைக்கிளில் சென்றுகொண்டிருந்தசமயம் பத்தாம் கட்டையில் ஆயுதம் தாங்கியோரால் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொலைப்பட்டார்- அவருக்கு வயது 46.

நிலாவெளிக் கூட்டுறவுச்சங்கத் தலைவர். மாவட்டக் கிராமசேவையாளர்சங்கத்தின் தலைவர் ஆகிய பதவிகளை அவர் வகித்துவந்தார்.

அவரின் சடலம் நேற்று மாலை திருமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது. திருமலை பதில் நீதிவான் திரு இராசேந்திரபாலன் மரண விசாரணை நடத்தினார். (உ-எ-190)

### அதிகாரி சுட்டுக்கொலை

திருகோணமலை, ஆ 24

சந்தளாயில் நேற்று முன்தினம் இரவு விவசாய அதிகாரியான பி ஜி. குணதாஸ எவ்பவர் இனந்தெரியாதவர் களினால் சுட்டுக் கொலைப் பட்டார்.

அவர் தமது வீட்டில் இருக்கையிலே இச்சம்பவம் நடந்தது.

கொலை என்று பதில் நீதிவான் திரு. இராசேந்திரபாலன் தீர்ப்பளித்தார். (உ-எ-150)

### யாலவுக்கு அதிரடிப்படை

கொழும்பு, ஆக 24

யால வனவிலங்கு சரணாலயத்துக்கு இம்மாத ஆரம்பத்தில் இருந்து பெருந் தொகையான அதிரடிப்படை பொலிஸார் அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்

இளைய தலைமுறையினர் விரும்பும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(The best in Jaffna)

பாதுகாப்பான இடம்

For
- FOOD
- SERVICE
- COMFORT

Always Available at

**Hotel Gnanam's**

UNDER NEW MANAGEMENT

299, Clock Tower Road, Jaffna.

Open from 9.30 a.m. to 11.30 p.m.

Tele: 22082, 23067

யாழ். மாவட்டக் கலாசாரப் பேரவை

தவில், நாதஸ்வரக் கலை உபகுழு நடத்தும்

## பயிற்சி வகுப்பு

01. எதிர்வரும் 12.10.86 விஜயதசமி தினத்தன்று ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சூழலில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தவில் நாதஸ்வரக் கலைப்பயிற்சி வகுப்பிற்குச் சேர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

02. விண்ணப்பதாரிகள் 10 வயது தொடக்கம் 20 வயதிற்கு மேற்படாதவராயும் தவில் நாதஸ்வரக்கலை பயில விருப்பார்வமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பத்தில் சனி, ஞாயிறு தினங்களில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சூழலில் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் பிரபல்ய தவில், நாதஸ்வர கலைஞர்களினால் கற்பிக்கப்படும். பயிலுநருக்கு மதிய போசனமும் வழங்கப்படும்.

03. விண்ணப்பங்கள் 10.09.86 க்கு முன் கிடைக்கக் கூடியதாக தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை எனும் விலாசமிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை நேர்முகமாகவும், தேவஸ்தான அலுவலகத்தில் கையளிக்கலாம். இவ் விண்ணப்ப தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "தவில், நாதஸ்வர பயிற்சி" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

வை. மு. பஞ்சலிங்கம்,
தலைவர்,
யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை
யாழ்.மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.

20-8-86

## பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்
★ டென்மார்க்
★ பிரான்ஸ்
★ ஜேர்மன் ★ கனடா
★ ஸ்பெயின் ★ சுவீடன்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போட், விசா, பொண்ட், (BOND) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

**INTERSUN GROUP**

சின்னத்தம்பி அவெனியூ,
(மானிப்பாய் வைத்தியசாலைக்கருகாமையில்)
மானிப்பாய்.

# இலங்கைக்கு

## தாக்குதல் எச்சரிக்கை

### இந்தியாவிலிருந்து வந்தது

புதுடில்லி, ஆக 23

ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினால் கொழும்பு விமான நிலையம் உட்பட இலங்கையின் முக்கிய இடங்களைத் தாக்கப் போவதாக ஈழப் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து கட்சியின் தலைவர் திரு பாலசுப்பிரமணியம் இதை அறிவித்திருப்பதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐந்து கோரிக்கைகளும் வருமாறு;

1. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

2. இச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

3. இன வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பூரண நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

4. ஜே. வி. பி. யின் மீதான தடை நீக்கப்பட வேண்டும்.

5. தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள ஆயுதப்படை முகாம்கள் அகற்றப்பட வேண்டும். (உ-ஐ எ)

## அரசு-கூட்டணிப் பேச்சு

### அடுத்த வாரம் முழுவதும் தொடர்ந்து நடக்கும்

கொழும்பு, ஆக 24

அரசு — கூட்டணிப் பேச்சுவார்த்தை அடுத்த வாரம் முழுவதும் நடைபெறும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

வெள்ளிமாலை கூட்டணித் தூதுக்குழு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவைச் சந்தித்துப் பேசியது

அதன் பின்னரே திரு அமிர்தலிங்கம் அடுத்த வாரம் முழுவதும் பேச்சுவார்த்தை தொடரும் என்ற தகவலை வெளியிட்டார்

முந்திய ஏற்பாட்டின் பிரகாரம் கூட்டணித் தூதுக்குழு எதிர்வரும் புதன்கிழமை சென்னை திரும்புவதாக இருந்தது.

கூட்டணித் தூதுக்குழு வெள்ளி காலை காணி அமைச்சர் காமினி திஸநாயக்காவைச் சந்தித்துப் பேசியது

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நாளை திங்கட்கிழமை நிதி அமைச்சர் ரொனி டி மெல்லை மீண்டும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவர் என அறிவிக்கப்பட்டது.

இதேவேளை கூட்டணித் தூதுக்குழுவில் ஒருவராகப் பங்கு பற்றிய மட்டக்களப்பு மாநகர முன்னாள் மேயர் இரா. சம்பந்தன் நியாழக்கிழமை மட்டக்களப்பு திரும்பினார் (அ-எ-21)

## செய்திக்கொத்து

### செப்டம்பரில் கூட்டம்

கிளிநொச்சி, ஆக 24

இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் காலபோக நெற் செய்கை மற்றும் விதைப்புத் திகதி போன்றவற்றைத் தீர்மானிப்பது சம்பந்தமான கூட்டம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறும். (இ-76)

### நெல் விளைச்சல் 61 சத வீதம்

கிளிநொச்சி, ஆக. 24

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற் செய்கையின் சராசரி விளைவு ஏக்கருக்கு 60 புசல் என விவசாயப் பகுதியினர் தெரிவித்தனர். (இ-76)

### சனசமூக நிலையம் புனரமைப்பு

வல்வெட்டித்துறை, ஆக. 24

கரம்பன் இழக்கு காவி கோவிலடி சனசமூக நிலையத்தின் விசேஷ பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது

புதிய உத்தியோகத்தர் தெரிவு இடம்பெற்ற போது நிலையத்தின் புதிய தலைவராக திரு சிதம்பரநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த பல வருடங்களாக இயங்காமலிருந்த நிலையத்தை தொடர்ந்து நடத்துவதெனவும், பத்திரிகைகள் சஞ்சிகைகளை வாசகர்களின் நலன் கருதி நிலைய மண்டபத்தில் வைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-16)

### நீர்விநியோகம் ஆகஸ்ட் முடிவு வரை

கிளிநொச்சி, ஆக. 24

இரணைமடுக் குளத்திலிருந்து சிறுபோக வேளாண்மை செய்கைக்கு வழங்கப்பட்டு வந்த நீர் விநியோகம் ஆகஸ்ட் 9 ஆம் திகதியுடன் நிறுத்தப்படவிருந்த போதிலும் பல விவசாயிகளது நன்மை கருதி ஆகஸ்ட் 30 ஆம் திகதிவரை பின் போடப்பட்டுள்ளது.

இத்தீர்மானம் கடந்த வாரம் நடைபெற்ற இரணைமடுத்திட்ட குழுக் கூட்டத்தில் நிறைவேறியது. (இ 76)

### இடமாற்றத்தால் சம்பளம் தாமதம்

கரவெட்டி, ஆக 24

யாழ் அபிவிருத்திச் சபை உப அலுவலக நெல்லியடி அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு சண்முகநாதன் பருத்தித்துறைக்கு இடமாற்றம் பெற்ற பின்பு நெல்லியடி அலுவலகத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் அபிவிருத்திச் சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (இ-70)

### நிதி நிறுத்தப்பட்டது

மட்டக்களப்பு, ஆக. 24

மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகளுக்கு உலக வங்கியினால் வழங்கப்பட்டு வந்த நிதி இவ் வருடத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது

நிதி நிறுத்தப்பட்டுள்ளதால் நடைபெற்று வந்த நீர்ப்பாசன வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன (இ-21)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## கல்வியை காப்பாற்றும் பொறுப்பு ஆசிரியரிடமே

சாவெட்டி, ஆக-24

நமது பொக்கிஷமாகிய கல்வியை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஆசிரியரிடமே உள்ளது.

சாதனை செய்த மனிதர், பிரபல தலைமைத்துவம் என்ற விருதை திரு மு. சி. சினித்தம்பி பெற்றதற்காக தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து அவருக்கு பாராட்டு விழா நடத்தினர்.

அந்த விழாவில் விழா நாயகன் திரு. சினித்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்துக் கல்லூரி அதிபர் திரு ஆ. இரத்தின சபாபதியின் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவில் சினித்தம்பி மேலும் குறிப்பிடுகையில்;

21 ஆம் நூற்றாண்டு பல புதுமைகளைக் கொண்ட எலக்ரோனிக், கம்பியூட்டர் தொழில் நுட்பங்களைக் கொண்ட யுகமாக அமையும். இதற்கு இன்னும் 14 வருடங்கள் உள்ளன. எனவே மாணவர்களை வளர்த்தெடுப்பது நமது கடமையாகும் என்றார்.

திரு இரவியம், தெணியான் மற்றும் பல ஆசிரியர்கள் பாராட்டுரை நிகழ்த்தினர் (இ-70)

## அறிவியல் வழியில் வளர்ந்தவர் குழந்தைக் கவிஞர்

### அறிமுக விழாவில் பேராசிரியர் உரை

வட்டுக்கோட்டை, ஆக 24

தலைசிறந்த கல்விமான்கள் சிலருள் பெரியார் ஹண்டி பேரின்பநாயகம், முதல்வர் சின்னத்தம்பி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் கைலாசபதி போன்ற பேரறிஞர்கள் முதன்மை ஸ்தானம் வகிக்கின்றனர் இவர்களின் அறிவியல் அடிச்சுவட்டில் வளர்ந்தவர் தான் சமூகத் தொண்டர் க. ச. கந்தசாமி

சமகாலச் சந்தை சதுக்கத்தில் நடைபெற்ற குழந்தைக் குரல் கலைச்சோலை அறிமுக விழாவில் 'விவேகானந்த தத்துவம்' என்னும் பொருள் பற்றி உரையாற்றிய யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ப. சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் க. அருணாசலம் தலைமையில் விழா நடைபெற்றது

பேராசிரியர் ப. சந்திரசேகரம் தொடர்ந்து உரையாற்றும் போது, அருளியலோடு அறிவியலையும் அரசியலையும் தமது தொண்டாகக் கொண்டு முத்துறையிலும் தொண்டர் கந்தசாமி ஆற்றுகின்ற பணியானது அபாரமானது என்று கூறினார்.

வவுனியா வாரிக்குட்டியூர் மகாவித்தியாலய அதிபர் திரு. என். சே. தர்மலிங்கமும் பேசினார்.

திரு சோ. க. வேலாயுதர் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

குழந்தைக் கவிஞர் க. ச. கந்தசாமி நன்றியுரை நிகழ்த்தினார் (இ-16)

## உப்பு லொறி சோதனை

கொழும்பு, ஆக 24

யாழ்ப்பாணத்தில் இருந்து உப்பு கொண்டு வந்த லொறி ஒன்று சந்தேகத்தின் மீது கொழும்பு புறக்கோட்டையில் வைத்து பொலீஸாரால் கைப்பற்றப்பட்டது.

லொறி சோதனை இடப்பட்டது. அதன் பின்னர் லொறியின் சாரதியும் கிளீனரும் விசாரணைக்காக பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். (உ-ஐ-எ)

### வீதி திருத்தம்

பல மாதகாலமாகப் பூர்த்தி செய்யப்படாமலிருந்த புளியங்கூடல், சுருவில் பிரதான வீதி தற்போது சிறந்த முறையில் திருத்தப்படுகின்றது

ஏற்கனவே ஊர்காவற்றுறையிலிருந்து சுருவில் வரையிலான பகுதி திருத்தங்கள் செய்யப்பட்டு மிகுதியான பகுதி கவனிக்கப்படாமலிருந்தது

அண்மையில் நெடுஞ்சாலை திணைக்களத்தினர் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியினால் இவ்வீதி திருத்தத்திற்கான தார் யாழ்ப்பாணத்திலிருந்து கடல்மார்க்கமாக இங்கு கொண்டுவரப்பட்டது. (உ-16)

### நிர்வாகிகள்

மன்னார் ஆக 24

சின்னப்பண்டிவிரிச்சான் அ. சி. த. க. பாடசாலையில் அடைக்கலம் புகுந்த அகதிகளின் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவானார்கள்.

தலைவர்: திரு. மு. வீரய்யா. உப தலைவர். திரு மு. வைரமுத்து, செயலாளர்: திரு. பி. செல்லமுத்து, உப செயலாளர் திரு. பி. ராமசாமி பொருளாளர்: திரு. ஆ. சம்சன்.

பத்து பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவாகியது. (ஒ)

## தீவிரவாதிகளுக்கு புனர்வாழ்வு முகாம்

கொழும்பு ஆக 24

கொழும்புக்கு அருகில் உள்ள பெல்வத்தை என்னுமிடத்தில் 200 தீவிரவாத சந்தேக நபர்களை வைத்துப் பராமரிக்கும் புனர்வாழ்வு முகாம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சும் சாக்கியக் குற்றவாளிகள் சீர்திருத்தத் திணைக்களமும் பேச்சுக்களை நடத்தி வருகின்றன

இம் முகாமில் தங்க வைக்கப்படவுள்ள தீவிரவாத சந்தேகநபர்களுக்கு தச்சுத் தொழில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (உ-ஐ-எ)

## எவர் எதிர்ப்பினும் பேச்சுக்கள் நடக்கும்

### சபையில் அமைச்சர் லலித்

கொழும்பு, ஆக. 24

இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணப்படும்வரை பேச்சுக்கள் தொடரும்

எவர் எதிர்ப்பினும் பேச்சுக்கள் நடத்தப்படுவது நிறுத்தப்படமாட்டாது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி அவசரகால நீடிப்புப் பிரேரணை மீது பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"ஜே. வி. பி ஒரு ஜனநாயக விரோதசக்தி. ஜனநாயகத்துக்கு முரணான சக்தியை இல்லாமல் ஒழித்திடு அதை அமைதிப்படுத்த வேண்டுவதை எதிர்க்கின்றனர்" — என்றும் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில்— சுதந்திரக்கட்சி மாகாண சபையை வன்மையாக எதிர்க்கின்றது. அரசமைப்பின் ஆறாவது திருத்தம் காரணமாக நாடாளுமன்றத்துக்கு வர முடியாதுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்துக்கு அரசு பாதுகாப்பு வழங்குகின்றது. எதற்காக? அதே நேரத்தில் ஜே. வி. பி. மீதான தடை நீடிக்கப்படுகிறது.—என்றார். (உ-எ)

### காணி விற்பனைக்கு

சகல வசதிகளையும் உடைய ஒரு பரப்பு காணி கீழே குறிப்பிடும் முகவரியில் உடனடியாக விற்பனைக்கு உண்டு. எஸ் என் ராஜவேல் இல 78, தேசாவில் பிள்ளையார் வீதி, பத்திரகாளி கோவிலடி, வண்ணார்பண்ணை மேற்கு யாழ்ப்பாணம் (பத்திரகாளி கோவிலுக்கு முன்னால்)

### தேவை

வெப்பம் விதை, இலுப்பம் விதைகள் தொகையாகத் தேவை தொடர்பு கொள்ளவும். -மிக்கைல்—யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

மானிப்பாய் மேற்கில், வீடு வளவு, காணி விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு, ஜீவன் ரவலர்ஸ் காலை 9.00—12.00, பஸ் நிலையம் முன்பாக, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம்.

## பனம் பொருள் உணவு அறிமுக விழா

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன்
யாழ் பீச் இன் ஆதரவில்
ஜோ. எகட்டன் வழங்குகின்றார்

முற்றிலும் புதிய பனியின் பனம் பொருள் உணவு வகைகள் உங்களுக்கு — இவை முன்னரும் தயாரிக்கப்படாதவை

ஆம்! 07-09-1986 அன்று
காலை 10.30 மணி முதல்
இலக்கம் 139, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்
யாழ் பீச் இன்னில்

உங்கள் அனைவரையும் பங்குபற்ற அழைக்கின்றோம்

என்றும் புதுமையை வழங்கும் ஜோ எகட்டன் ஜப்பான் சென்று திரும்பியதும் வழங்கும் யாழ்நகரில் முதல் பனம் பொருள்

உணவு அறிமுக விழா!

இத்திகதியை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!

செனித் AD'S

வட இலங்கையில் ஒரே ஒரு விளம்பர முகவர்கள்

## செனித்

மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

மே/பா யாழ் பீச் இன்
139 கடற்கரை வீதி, யாழ்நகர்.
நிர்வாக இயக்குநர்,
ஜோ. எகட்டன்

உங்கள் வியாபார பொருட்களை கவர்ச்சி விளம்பரங்களுடன் உங்கள் வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துங்கள்! நாடுங்கள்

ஜோ. எகட்டன்
'செனித்' யாழ்நகர்.

விளம்பர வடிவமைப்பு:
ஜோ. எகட்டன்+மனிக்குரல் மேஜர் ஷண்= செனித் AD'S

## பிரயாண ஒழுங்குகள்

✶ இவ்வளவு காலமாகத் தடைப்பட்டிருந்த கனடா பிரயாணம் இப்போது நேரடியாக மேற்கொள்ளப்படுகிறது. கூடிய விரைவில் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு கனடா செல்வோர் பாஸ்போட், 10 புகைப்படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

✶ டென்மார்க் பிரயாணம் நேரடியாகச் செல்ல உடன் தொடர்புகொள்ளவும்.

✶ குவைத், அபுதாபி, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்குப் பிரயாண ஒழுங்குகள் நடைபெறுகின்றன. உடன் செல்வோர் பாஸ்போட், 6 புகைப்படங்களுடனும் தொடர்புகொள்ளவும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொண்ட், டிக்கற் என்பன ஒழுங்குசெய்யப்படும்.

யாழ்ப்பாணம்:

**GROUP ATLANTIC**

(சிங்கள மகா வித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, JAFFNA.

கொழும்பு:
V. M. BALASSINGAM
Hotel Orchid Inn, 571/6, Galle Road,
Wellawatte, COLOMBO-6. T'Phone: 583916

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஒருவன் பிறரிடத்துக் குற்றம் காணப் புகுவானேயாயின், அவனது மனமே முதலில் மாசடைகின்றது

— அன்னை சாரதாதேவி.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல 15 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி 24805 22073
24-08-86 த பெ 23

## அகதிகளும் அரசாங்கமும்

செட்டிகுளப் பகுதி அகதிகளுக்கு எவ்வித நிவாரண உதவியும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவர்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் இருந்து அதிகளாக வெளியேறி மீண்டும் வந்து சேர்ந்தவர்கள். அனேகமாக எல்லோருமே விவசாயிகள்.

இவர்களுக்குக் கஷ்ட நிவாரண உதவிகள் மட்டுமன்றி வழமையாக வழங்கப்படும் விவசாயத்துக்கான உதவிகளும் வழங்கப்படவில்லை.

கலவரங்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாவோருக்கு தற்காலிகமாக நிவாரண உதவிகள் வழங்கப்படுவது வழக்கம் அதன் பின்னர் அவர்களுக்கு நிரந்தர புனர்வாழ்வு அளிப்பதற்கான உதவிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இது சர்வதேச நடைமுறை. மனிதாபிமானத்துடன் செய்யப்படும் உதவிகள்

இலங்கையிலும், அடிக்கடி கலவரங்கள் நடக்கத் தொடங்கிய பின்னர், அகதிகளின் நலன்களைக் கவனிக்கவென்று புனர்வாழ்வுத்துறை அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டது

தனி அமைச்சு நிறுவப்பட்ட போதிலும் தமிழ் அகதிகளுக்கு வேண்டிய உதவிகள் உரியபடி கிடைப்பதில்லை மேற்சொன்ன அமைச்சு அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரங்களின் பிரகாரம் தமிழ் அகதிகளே எண்ணிக்கையில் அதிகம்

எனினும் ஏனைய விஷயங்களைப் போலவே நிவாரணம், புனர்வாழ்வு உதவிகளைப் பொறுத்தமட்டிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். இரண்டாந்தர மக்களாக ஒதுக்கப்படுகிறார்கள் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுகிறது.

கலவரங்களால் இடம் பெயர்ந்த அகதிகளுக்கு, குறிப்பிட்ட ஒரு காலத்துக்கே அவர்களது சொந்த இடமில்லாத வெளி இடங்களில் வைத்து நிவாரண உதவி வழங்கப்படும் என்று புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இது அகதிகளை பலவித நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாக்கும் ஒரு மறைமுகத் திட்டம் எனலாம் அதில் பல அரசியல் சூழ்ச்சிகளும் அடங்கியுள்ளன என்பதை மறைக்க முடியாது; மறுக்கவும் இயலாது

குறிப்பாக இது கிழக்கு மாகாணத்தில் இருந்து அதிகளாக வெளியேறிய பெரும்பான்மை இன மக்களை அங்கு திரும்பவும் சென்று குடியிருக்கச் செய்வதற்கான பெரும் திட்டமாகும். அதன் மூலம் கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசாரத்தை மாற்றுவதே அந்தத் திட்டம் கிழக்கு, தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்று உரிமை கோராமல் தடுத்து விதண்டாவாதம் புரிவதற்கான ஏற்பாடு என்றும் சொல்லலாம்.

இந்த வகையில் பல சிங்கள அகதிகள் கிழக்கில் மீளக் குடியமர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதும் உண்டு. சிங்களப் பெண்மணி ஒருவர் தொடர்ந்த வழக்கு ஒன்று அதற்கு நல்ல உதாரணம்.

தமிழ் அகதிகளைப் பொறுத்தமட்டில், அவர்களை உயிராபத்தில் மாட்டிவிடும் மறைமுகத் திட்டம் இது. எப்போது குண்டர்கள் வந்து தாக்குவார்கள் என்ற மரணபயத்துடன்— ஊசலாட்டத்துடன் அவர்களை வாழ வைக்கும் நிர்ப்பந்தம் இது ஊர்காவலர் என்றும் சீருடையினர் என்றும் ஆயுதம் தாங்கியவர்களுக்கு அவர்களை இரையாக்கும் திட்டம் என்று ஏன் கொள்ளமுடியாது? மூதூரில் அகதி முகாம்களில் இருந்த தமிழர்கள் படையினரின் ஆயுதங்களுக்கு இரையாகவில்லையா?

சொந்த இடத்துக்குத் திரும்பினால்தான் நிவாரண உதவிகள் என்ற நிர்ப்பந்தத்துக்குத் திருமலைத் தமிழ் அகதிகள் பலர் எடுபடவில்லை செட்டிகுளத்தைச் சேர்ந்த 52 குடும்பங்கள் தமக்குள்ள நிர்க்கதியினால் சொந்த இடத்துக்குத் திரும்பினர். அவர்களுக்கு அரசின் நிவாரண உதவி எதுவும் இல்லை.

ஆனால் தலைமன்னாரிலிருந்து வெளியேறிய 150 சிங்களக் குடும்பங்களுக்கு அவர்கள் திரும்பி வராமலே அங்கு வைத்து நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. அந்த நிவாரண உதவிகள் அவர்கள் இப்போது குடியிருக்கும் இடங்களுக்குப் பாதுகாப்பாகப் போய்ச் சேர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

செட்டிகுளம் தமிழ் அகதிகளுக்கு ஒரு நீதி தலைமன்னாரிலிருந்து வெளியேறிய சிங்கள அகதிகளுக்கு மற்றொரு நீதி ஸ்ரீலங்கா அரசின் புதுவித நீதி, நியாய, உரிமை முத்திரைகள் அசலாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன பார்த்தீர்களா!

இது ஏனைய தமிழ் அகதிகளுக்கு ஓர் நல்ல பாடமாகும். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அகதிகள் புனர்வாழ்வு இயக்கங்கள், ஸ்தாபனங்களுக்குப் பெரும் சவால்!

இனப் பிரச்சினைக்கு முடிவு கண்டு, தமிழ் மக்களின் உரிமைகள் பூரணமாகக் கிடைக்கும் வரை தமிழ் அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டியது தமிழர்கள் எல்லோரதும் கடமை.

அரசாங்கத் திட்டங்களுக்குப் புறம்பான ஒன்றிணைக்கப்பட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட புனர்வாழ்வுத் திட்டங்களை வகுத்து நேர்மையுடன் மோசடிக்கு இடம் கொடுக்காமலும் உதவ வேண்டும். ஆனால் நான்கு பேர் சேர்ந்து புனர்வாழ்வு நிதி சேகரித்து தமது சொந்தப் பணப்பையை நிரப்ப இடம்கொடுக்கக் கூடாது. போலிகளை இனங்கண்டு அவர்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு இயக்கம், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் போன்ற பிரதான ஸ்தாபனங்களே கூட்டுத் திட்டங்களை வகுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு கண்ணியத்துடன் உதவ வேண்டும். செய்வார்களா?

# இஸ்ரவேல் பிரதமர் எகிப்து செல்வார்

ஜெய்ரோ, ஆக.23

இஸ்ரவேல் பிரதமர் ஷிமோன்பெரஸ் அடுத்த மாதம் எகிப்துக்குச் சென்று ஜனாதிபதி முபாரக்குடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

தபா எல்லைப் பிரச்சினை தொடர்பாக எகிப்திற்கும் இஸ்ரவேலுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று இச்சந்திப்பின் போது கைச்சாத்தாகும். அத்துடன் மத்தியகிழக்கு சமாதான நடவடிக்கைகள் திசிரப்படுத்தவது பற்றியும் ஆராயப்படும்.

1982 ஆண்டு இஸ்ரவேலின் படைகள் லெபனானுக்குள் ஊடுருவல் செய்ததைத் தொடர்ந்து இஸ்ரவேலின் தலைநகரில் இருந்து திருப்பி அழைக்கப்பட்ட எகிப்திய தூதவர் மீண்டும் அங்கு சென்று தமது கடமைகளை ஏற்பார்.

1981ஆம் ஆண்டு சைனாய் பிரதேசத்தில் ஜனாதிபதி அன்வர் சாதாத்தும் — பிரதமர் ஷிமோன் பெரஸும் சந்தித்தனை அடுத்து எகிப்திய - இஸ்ரவேல் தலைவர்கள் இப்பொழுதுதான் முதலாவது தடவையாக சந்திக்கின்றார்கள். (ஒ)

## பிரிட்டனில் கார் களவு அதிகரிப்பு

லண்டன், ஆக. 23

பிரிட்டனில் ஆண்டுதோறும்சுமார் மூன்றரை லட்சம் கார்கள் திருடப்படுகின்றன

லண்டனில் மட்டும் ஆறு நிமிடங்களுக்கு ஒரு கார் களவாடப்படுவதாக முறையிடப்படுகிறது

கார் களவைத் தடுக்க முடியாதிருப்பதாக உள்துறை அமைச்சு அறிவித்து விட்டது

கார் தயாரிப்பாளர்களின் உதவியை பிரிட்டன் நாடியுள்ளது

கார் களவைத் தடுக்கக் கூடிய விதத்தில் கார்களைத் தயாரியுங்கள்- இதுவே அரசு, தயாரிப்பாளருக்கு விடுத்த வேண்டுகோள். (உ-எ)

## விவாக ரத்து அனுமதி

புவனர்ஸ் அயர்ஸ் ஆக23

ஆர்ஜென்டீனாவின் மக்கள் பிரதிநிதிகள் சபை விவாகரத்துச்சட்டத்தை அமோக பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியது. (ஒ)

## ராணுவ வலிமையை விரும்பும் அமெரிக்கர்

வாஷிங்டன், ஆக 23

அமெரிக்கா ராணுவ வலிமை கொண்டதாக விளங்க வேண்டும் என விரும்பும் பெரும்பான்மையான அமெரிக்கர்கள் ரஷ்யா ஏற்கனவே கண்ட உடன்படிக்கையை மீறி நடப்பதாக கருதுகின்றார்கள்.

இவ்வாறு அமெரிக்க மக்களிடம் கருத்தை கேட்டறிந்து மதிப்பீடு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

கேந்திர ஆயுத நிலைகளைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ரஷ்யாவுடன் செய்து கொண்ட இரண்டாவது உடன்படிக்கையை கைவிடுவது என்ற ஜனாதிபதி றேகனின் தீர்மானத்தை அமெரிக்கர்கள் பலர் ஆதரிக்கின்றனர்

எதிர்காலத்திலும் ரஷ்யாவை நம்பி இது போன்ற ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள முடியாது என 77 வீதமான அமெரிக்க மக்கள் கருதுகின்றார்கள். (ஒ)

## தேவையற்ற யுத்தங்களால் நாட்டின் வளம் வீணடிப்பு

ஜெய்ரோ ஆக 23

மூன்றாவது மண்டல நாடுகள் தேவையற்ற யுத்தங்களினாலும் பலாத்கார நடவடிக்கைகளினாலும் தமது வளங்களை வீணாக்குகின்றன.

இவ்வாறு 77 நாடுகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாற்றிய எகிப்திய ஜனாதிபதி முபாரக் தெரிவித்தார்

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இம்மாநாட்டின் மூன்றும் நாள் நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்புரை ஆற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈரான்-ஈராக் யுத்தம், லெபனான் உள்நாட்டுக் கலவரங்கள், இந்து சமுத்திரப் பகுதியில் தோன்றியுள்ள நெருக்கடி ஆகியவற்றை உதாரணம் காட்டிய அவர், வளரும் நாடுகள் சண்டையிடுவதைக் கைவிட்டு ஒற்றுமை மூலம் தமது நிலையை உயர்த்த வேண்டும் என்றார். (ஒ)



## அக்கினோவிற்கு நினைவுச் சின்னம்

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொராஸின் அக்கினோ தமது கணவர் அக்கினோ கடந்த மூன்று வருடங்களுக்கு முன் கொலை செய்யப்பட்ட மணிலா விமான நிலையத்தில் ஆறடி உயரமுள்ள வெங்கல சிலையொன்றை திரை நீக்கம் செய்தார்.

## ஒலிம்பிக் கட்டடம் தகர்ப்பு

1992 - ஆம் ஆண்டு நெதர்லாந்தில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்கென நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடங்கள் ஆட்சேபனை காரணமாக விஷமிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

## 25 லட்சம்பேர் வேலையற்றோர்

பிரான்ஸில் வேலை அற்றவர்களின் எண்ணிக்கை 25லட்சமாக அதிகரித்துள்ளது. கடந்த 40 ஆண்டு காலத்தில் வேலையில்லாப் பிரச்சினை இவ்வளவு மோசமானதாக ஒருபோதும் இருந்ததில்லை.

## ஆபிரிக்காவுக்கு அழைப்பு இல்லை

ஜகார்த்தா, ஆக 23

இந்தோனேஷியாவில் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச உச்சிமாநாட்டிற்குதென் ஆபிரிக்க பிரதிநிதிகள் அழைக்கப்படமாட்டார்கள்

இவ்வாறு ஜகார்த்தாவிலிருந்து வெளியான அறிக்கைகள் தெரிவித்தன.

ஜனாதிபதி சுஹார்ட்டோ திறந்து வைக்கும் மாநாட்டில் 55 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுவார்கள். (ஒ)

## பயங்கரவாதக்குழு ஈராக்கிற்கு உதவி

ஈராக்குடன் தொடர்பு வைத்துள்ள சில பயங்கரவாத குழுக்கள் பற்றிய விவரங்களை ஈரான் வெளியிட்டது.

## கதிர் இயக்க சாவு 31

கடந்த ஏப்ரலில் ரஷ்யாவில் ஏற்பட்ட அணு ஆலை விபத்தினால் உடனடியாக இருவர் பலியாகினர். பின்னர் ஏற்பட்ட கதிர் இயக்கத் தாக்கத்தால் இதுவரை 31 பேர் பலியாகியுள்ளனர்.

## மார்க்கோஸிற்கு சத்திர சிகிச்சை

பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி பேர்டினட் மார்கோஸுக்கு கண்சத்திர சிகிச்சையொன்று ஹொனலுலுவில் நடைபெற்றது.

## படகு அகதிகள் குறித்து பஞ்சாட்சரம்

வாஷிங்டன், ஆக 23

அடுத்த குடிவாருக்கு விழும் என்று தெரியாத நிலையில் இலங்கையில் இருந்து தமிழர்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர்

இப்படி அமெரிக்காவில் உள்ள உலகத் தமிழீழ இயக்கப் பிரமுகர் திரு விக்ஸன் பஞ்சாட்சரம் தெரிவித்தார்.

இலங்கையிலும் பார்க்க மேற்கு ஜெர்மனியில் சுதந்திரமாகவும் கௌரவமாகவும் வாழலாம் என்ற எண்ணத்தில் அங்கு சென்றார்கள்.

அங்கு நிலவும் நிலைமை காரணமாக தமிழர்கள் அங்கு இருந்து வெளியேற முயற்சிக்கின்றார்கள். அப்படி முயற்சித்து வெற்றி கண்டவர்கள் தான் கடலில் தத்தளிக்கையில் காப்பாற்றப்பட்ட 154 இலங்கைத் தமிழ் அகதிகள்—

இப்படி திரு பஞ்சாட்சரம் சொன்னார். (ஐ-எ)

## கைதானவர் குடும்பங்களுக்கு நிதி உதவி

கேப்டவுன், ஆக.23

தென் ஆபிரிக்காவில் அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைதானவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

இவ்வாறு அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் அவசரகாலச்சட்டத்தின் கீழ் பல ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களது குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக 24லட்சம் அமெரிக்க டாலர் ஒதுக்கப்பட்டுள்ளதாக தென் ஆபிரிக்க நிதி அமைச்சர் தெரிவித்தார். (ஒ)

## லெபனான் கலவரங்கள் முடிவாகும்?

பெய்ரூட், ஆக.23

லெபனானில் 11 ஆண்டு களாக நடைபெற்றுவரும் உள்நாட்டு கலவரங்கள் விரைவில் முற்றுப் பெறும்.

இதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சர்வதேச ஆதரவு பெருகி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதமர் கராமியின் புதிய சமரச முயற்சிக்கு லெபனானின் ஷியா முஸ்லிம் பிரிவினரும் பெரிதும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். (ஒ)

# அருணகிரியார் மெய்யாக விளம்பியஒருசொல்யாது?

## நல்லை அருளுரையில் விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 24

அருணகிரியார் மெய்யாக விளம்பிய ஒரு சொல் யாது?

''சும்மா இரு''—என்பதாகும் என்று ஆத்மஜோதி நா. முத்தையா நல்லை ஆதீன மண்டபத்தில் நடந்த வியாழன் அருளுரை நிகழ்த்துகையில் கூறினார்

அவர் மேலும் சொன்னதாவது;

சும்மா இருக்கச் சுகம் என்பது பெரியார் வாக்கு. உடம்பு சும்மா இருத்தல் 'காஷ்ட மௌனம்''—வாய்மூடி மௌனியாக இருத்தல் ''வாக் மௌனம்''. மனம் சும்மா இருத்தல் மனோமௌனம்.

சும்மா இருத்தல் மூவகை. சோம்பல் கொண்டு ஒரு வேலையும் செய்யாது இருத்தல்; நன்கு வேலை செய்தவர்கள் இளைப்பாறிச் சும்மா இருத்தல்; ஞானநெறியில் நின்று தவம் புரிதல் ஆகியனவை

நன்றாக உழைத்தவர்கள் சும்மா இருத்தல் இயல்பு அப்படி இருந்தால் மட்டுமே அவர்கள் மேலும் தம்முடைய நல்லுழைப்பை நாட்டுக்கு நல்கி நலம்புரிய முடியும். மூன்றாவது வகையான சும்மா இருத்தலை ஆன்ம நெறியிலே ஈடுபடுபவர்கள் விரும்புவார்கள்.

''சும்மா இரு சொல்லற என்றலுமே அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே'', என்பதுதான் அருணகிரியார் வாக்கு.

இப்படி ஆத்மஜோதி முத்தையா தெரிவித்தார். (உ-எ)

## கல்முனையில் புனர்வாழ்வுச்சபை

கல்முனை, ஆக 24

கல்முனைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக தமிழர் புனர்வாழ்வுச் சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சட்டத்தரணி ஜி. குமாரலிங்கம் இப் புனர்வாழ்வுச் சபையின் தலைவராகத் தெரிவானார். (உ-எ-84)

## மேலும் 240சிப்பாய்கள் கடற்படைக்கு

திருகோணமலை, ஆக. 24

புதிதாகப் பயிற்சி பெற்ற 240 சிப்பாய்கள் வெள்ளிக் கிழமை தொடக்கம் இலங்கைக் கடற்படையில் பணிபுரிய ஆரம்பித்துள்ளனர்.

இது சம்பந்தமான அணிவகுப்பு மரியாதை வெள்ளிக் இரவு 7 மணி அளவில் திருமலைக் கடற்படை மைதானத்தில் நடைபெற்றது. (உ-எ-150)

## முள்ளியான் கிராம அபிவிருத்தி வேலைகளை உ. அ. அதிபர் பார்வையிட்டார்


நாகர்கோயில், ஆக. 24

பருத்தித்துறைத் தொகுதியில் மிகவும் பின்தங்கிய பகுதியான முள்ளியான் கிராமத்துக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் சென்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தமது அலுவலக உத்தியோகத்தர்கள் சகிதம் அண்மையில் அங்கு சென்றிருந்தார்.

முள்ளியான் பகுதி மக்கள் உதவி அரசாங்க அதிபர் குழுவுக்கு நீண்டகாலமாக தாம் அனுபவித்து வரும் போக்குவரத்துக் கஷ்டங்களை எடுத்துக் கூறினர்.

உதவி அரசாங்க அதிபர் அவற்றைத் தீர்ப்பதற்கு ஆவன செய்வதாக உறுதி அளித்தார். (இ-144)



பொய்யாமொழி

குறள்:
வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

பொருள்:
தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்லுவர்.

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## வெற்றி வேலெடுத்து நல்லூர் முருகா வருக!

சிரசினிலே குவிந்து கைகள் வணங்கி நிற்கச்
சிந்தையிலே உந்தனது நினைவே நிறைய
பெருகிவரும் நீருடனே விழிகள் விளங்கப்
பாடியுந்தன் பெரும்புகழை நாவும் பரவச்
சரவணனே சண்முகனே வேலென்றும் வேண்டேன்
சக்தியினே செந்தமிழர் துயரம் தீர்க்க
வருகவெற்றி வேலெடுத்தே வளமாம் வாழ்வை
விரைந்துஅவர் பெற்றிடவே செய்வாய் பேனே.

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

# ஜெபத்தின் வல்லமை

ஞானக்கதிர்

★ லூக்கா (22:44) அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக வாஞ்சையோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையிலே விழுந்தது. எம் ஜெபமும் இப்படியாகவே இருக்க வேண்டும்.

★ மத்தேயு (4:2) அவர் இரவும் — பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்து ஜெபித்தார். நாமும் சோர்ந்து போகாமல் இரவும்—பகலும் பல மணி நேரம் ஜெபத்தில் தரித்து நல் ஆவியை பெற்றுக்கொள்வோம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் அன்பு, பொறுமை, தாழ்மை, ஏழ்மை இவற்றின் உருவெடுத்து தம் மக்களுக்காக அனேக நற்கிரியைகளை நடப்பித்தார் என வேதத்தில் வாசிக்கிறோம். இன்னும் சிலுவையில் எமக்காகச் சிந்தப்பெற்ற திரு இரத்தத்தினால் எம் பாவங்களை மன்னித்து, ஜீவிக்கிறவராகவே இன்றும் எம்முடன் இடைப்படுகிறார். ஆகவே எம்மை பிதா நம்பி தந்த பொறுப்பதனை நிறைவேற்ற நாம் அன்பின் ஆவியையும், இரக்கங்களின் ஆவியையும் பெற்றுக்கொள்ள ஜெபமே மாபெரும் தேவைலனாகும்.

★ ஏசயா (11:2) இயேசு தம் தந்தையிடம் பெற்ற நல்ல சவுகளை காண்கிறோம். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும் ஆலோசனையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பலத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார் என காண்கிறோம்.

ஆகவே இந்த ஆவியை நாமும் பெற உறுதியான ஜெபத்தில் தரித்து புதிய அபிஷேகத்தை பெற்று



கர்த்தருடைய ஆவியானவர் நம் உள்ளத்திலும் சரீரத்திலும் தங்க நம்மை பரிசுத்தப்படுத்தி ஜெபத்தில் உறுதியாக இருப்போம். (இ)

## பாலர் பாடசாலை

சாவகச்சேரி, ஆக. 24

மட்டுவில் வடக்கில் பிலிப் பாலர் பாடசாலை என்ற பெயரில் புதிய பாடசாலை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

லயன்ஸ் சமூகத்தலைவர் டாக்டர் பே பிலிப் மங்கள தீபம் ஏற்றி இதனைத் திறந்து வைத்தார். (இ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SPOKEN ENGLISH**
Full Course Fees Rs. 100/- Only
**TOEFL**
Full Course Fees Rs. 250/-
Lecturer: MR. KANDIAH NAVERENDRAN
Week-end Classes have just commenced
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone 24201

# உதயன்

24 08-1986 ஞாயிற்றுக்கிழமை

**Computer Programming**
6 Months — Weekends
BASIC LANGUAGE
CLASSES HAVE JUST COMMENCED
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone: 24201

# தமிழர் விடிவுக்கு முஸ்லிம்கள் குந்தகமாக இருக்கக் கூடாது

## கிழக்கு பிரமுகர் கருத்து

மட்டக்களப்பு, ஆக. 24
தமிழர்களின் விடுதலைப் போராட்டம் விடிவை எதிர்நோக்கும் இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம்கள் ஒருபோதும் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடாது.

மேற்கண்டவாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம். அஸ்ரஃப் இனப் பிரச்சினை தொடர்பாக தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

தமிழ்மொழி மாநில அமைப்பில் முஸ்லிம்களின் எதிர்கால அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய ஓர் இணக்கத்தைக் காணமுடியாதபட்சத்தில் முஸ்லிம்களுக்கென்று தனியான ஒரு சபை - கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பெரும்பாலாக வாழும் பகுதிகளை உள்ளடக்கியதாக - அமையவேண்டுமென இம்மாகாண முஸ்லிம்கள் முடிவு செய்துள்ளார்கள்.

முஸ்லிம் சமூகம் முன்வைத்துள்ள பிரேரணைகளுடன் தமிழ்த் தலைவர்கள் இணக்கம் காணும் பட்சத்தில் கிழக்கில் வாழ் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒவ்வியமான எதிர்காலத்தைப் பெறலாம்.

இருசமூகத் தலைவர்களிடையே இணக்கம் ஏற்படும்போது இருசமூகமும் இணைந்து அரசிடம் எமது கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

இனப் பிரச்சினைக்காக எடுக்கப்படும் எந்தவொரு தீர்வும் கிழக்கு வாழ் முஸ்லிம்களின் அரசியல் பலத்தை ஒன்றிணைப்பதாக அமைய வேண்டும். முஸ்லிம்களின் இன்றைய தேவை அரசியல் தனித்துவமாகும்.

இப்படி அவர் கூறுகிறார். (உ-2)

## மினி சினிமா தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 24
யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் செயற்பட்டுவரும் மினி சினிமாக்களை ஓர் ஒழுங்கு அமைப்புக்குள் கொண்டுவர ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் ஸ்ரீதர் படமாளிகையில் மினி சினிமா உரிமையாளர்களை அழைத்து கூட்டம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

காலை 8.30 மணிக்கு நடைபெறும் இக் கூட்டத்துக்கு சகல மினி சினிமா உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி இயக்கம் அறிவித்துள்ளது. (இ-10)

விளையாட்டரங்கு

## வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகள்

மானிப்பாய், ஆக. 24
யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெற்ற இப் போட்டிகளில், யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. [illegible] ராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 68 பாடசாலைகள் இப்போட்டியில் பங்கு கொண்டன.

15 வயது, 17 வயது, 19 வயது என மூன்று பிரிவுகளில் நடைபெற்ற இப் போட்டிகளில் இறுதி வெற்றி பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு:

15 வயது: 1. உடுவில் மகளிர் கல்லூரி 2. வேம்படி மகளிர் கல்லூரி

17 வயது: 1. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி 2. பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி

19 வயது: 1. உடுவில் மகளிர் கல்லூரி 2. யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் (8-90)

## புத்தூர் வினஸ் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அச்சுவேலி, ஆகஸ்ட் 24
புத்தூர் வினஸ் விளையாட்டுக் கழகத்தின் 23 ஆவது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி புதன் 20ஆம் திகதி ஆரம்பமாகியது.

யாழ்ப்பாணம் — கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இந்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளன.

11 பேர் கொண்டதாகவும் 9 பேர் கொண்டதாகவும் இரண்டு பிரிவுகளாக போட்டி நடைபெறுகிறது (இ-11)

## புளொட்டில் இருந்து நீக்கம்

யாழ்ப்பாணம், ஆக 24
தமிழீழ மக்கள் விடுதலைக் கழக அங்கத்தவர்களில் ஒருவராகிய தோழர் பத்மநாதன் (பொலிஸ்) (கொக்குவில்) எமது ஸ்தாபனத்தில் இருந்து நீக்கி வைக்கப்படுகிறார் என அறிக்கை ஒன்றில் பிரஸ்தாப கழகம் தெரிவித்துள்ளது (இ)

## சுன்னாகத்தில் சௌக்கிய பரிசோதனை

சுன்னாகம், ஆக 24
இன்று ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்தில் பொது சௌக்கிய பரிசோதனை இயக்கம் நடைபெறுகிறது

சிறுவர்களையும் மாணவர்களையும் தொற்று நோய்களில் இருந்தும் காப்பாற்றும் நோக்குடன் சுன்னாகம் சந்தைக்கு அருகாமையில் நான்கு பரிசோதனை நிலையங்கள் திறவப்படும்.

பெருந்தொகையான டாக்டர்கள், தாதிமார், தொண்டர்கள் பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் கொண்ட குழு பொதுமக்களையும், சிறுவர்களையும் மாணவர்களையும் தனித்தனியாக பரிசோதிக்கும். (இ-27)

## கை கலப்பு

யாழ்ப்பாணம், ஆக 24
தொப்புக்காடு, தம்பாட்டி படகுச் சேவைக்காரர்கள் நேற்று கைகலப்பில் ஈடுபட்டனர்.

இதனால் ஊர்காவற்றுறை, காரைநகர் படகுச் சேவைகள் விதம் பிதம் அடைந்தன

கைகலப்பில் ஈடுபட்ட இரு கோஷ்டியினருக்கும் இடையில் சமரசம் செய்துவைக்க இளைஞர் கோஷ்டி ஒன்று நடவடிக்கை எடுத்தது (உ-10)

### புளியங்குளத்தில் காணமல்போய்

## தேடப்பட்ட நால்வரும் வீடு திரும்பினர்கள்

யாழ்ப்பாணம், ஆக 24
வவுனியா புளியங்குளத்துக்கு அருகில் நேற்று முன்தினம் காலை சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தபோது காணமற்போனதாகக் கூறப்பட்ட 4 தமிழர்களும் நேற்று வீடு திரும்பினர்.

சிப்பாய்களுக்குப் பயந்து காட்டுக்குள் இந்த நால்வரும் மறைந்திருந்தனராம்.

இதனிடையில் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த இருவரும் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

உயிரிழந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

1. சுப்பையா செல்வராசா, வயது 25, புளியங்குளம்வாசி. 2 பிள்ளைகளின் தந்தை.

2. சுப்பிரமணியம் சதாசிவம், வயது 32, கனகராயன்குளம்வாசி, 3 பிள்ளைகளின் தந்தை.

புளியங்குளத்தில் இருந்து 4 மைல் தொலைவில் உள்ள குறிப்பிட்ட குளத்திற்குச் சென்றுகொண்டிருந்த ட்ராக்டர் மீது பதுங்கியிருந்த சிப்பாய்கள் சுட்டனர் என்றும் தெரியவந்தது.

இதன்பின்னர் டிராக்டர் எரிக்கப்பட்டது. ட்ராக்டரில் இரண்டு டின் மீன்கள், பெட்டிகள் அச்சமயம் இருந்தன. (உ-எ)

### கொல்வின் கூறுகிறார்:

## நாடு அனைவருக்கும் சொந்தம் என்ற உணர்வு ஏற்படாததே பிரச்சினைக்குக் காரணம்

கொழும்பு, ஆக 24
சுதந்திரத்தின் பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் இந்த நாடு அனைவருக்கும் சொந்தம் என்ற எண்ணத்துடன் நடந்து இருந்தால், தற்போதைய நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அரசமைப்பு விவகார அமைச்சராகப் பணிபுரிந்த லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா தெஹிவளையில் நடந்த கூட்டத்தில் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது:

மக்கள் யு. என். பியையும் சுதந்திரக்கட்சியையும் மாறி மாறித் தெரிவு செய்ததினால் தான் நிலைமை மோசமடைந்தது.

மக்களுக்குத் தெரியாமல் செய்யப்பட்ட பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்படமுடியாத நிலைமை ஏற்பட்டது.

தமிழருக்கு உண்மையான குறைபாடுகள் உள்ளன. பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தருணம் இது. தவறவிட்டால் என்றுமே இச் சந்தர்ப்பம் கிடைக்காது.

இப்படி அவர் சொன்னார். (இ-எ)

## கோட்டைக்கு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன் மண்டைதீவு இராணுவ முகாமில் இறக்கப்பட்டனவாம்.

பின்னர் கவசவாகனங்கள் டிரக்குகள் மூலம் கோட்டை முகாமுக்கு ஆயுதங்கள் எடுத்துவரப்பட்டன என்று தெரியவருகிறது (உ-10)

## போராளி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருப்தி செய்யப் போதுமானவையா என்பதைப் பரிசீலனை செய்தபின்னரே போராளி அமைப்புக்களின் அடுத்த நடவடிக்கை அமையும் என்று இச்சந்திப்பின் இந்திய அமைச்சர்களிடம் போராளிகள் தரப்பில் கூறப்பட்டதாம். (அ-ஜ-எ)

### வவுனியாவிலிருந்து யாழ்தேவி

## யாழ். பயணிகளின் வருகையைப் பார்த்தே புறப்படவேண்டும் எனக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 24
யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பயணிகளின் வருகையைப் பார்த்தே, வவுனியாவில் இருந்து கொழும்பு ரெயில் புறப்பட வேண்டும் என்று ரயில்வே நிர்வாகத்திடம் மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராசசிங்கம் இது சம்பந்தமாக முன்னரும் கோரிக்கை விடுத்திருந்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு ரயிலைப்பிடிக்க யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா சென்ற பயணிகள், ரயிலைத் தவறவிட்டனர்; அதைத் தொடர்ந்து 300க்கும் அதிகமான பயணிகள் ஓர் இரவை வவுனியாவில் கழித்து நேற்றுத்தான் கொழும்பு சென்றனர்.

இதனைத் தொடர்ந்தே நாளை நடைபெற இருக்கும் வவுனியா இணைப்பதிகாரியின் கூட்டத்தில் இப்பிரச்சினையை மாவட்டப் பிரஜைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராசசிங்கம் எழுப்பவிருக்கிறார்.

இப்போது அநுராதபுரத்தில் இருந்து கொழும்பு செல்லும் "ரஜரட்டை ரஜனி" ரயில் சேவையை முன்னர் இடம்பெற்றது போல் வவுனியாவில் இருந்து மீண்டும் நடத்த வேண்டும் என்று டாக்டர் பரராசசிங்கம் கூட்டத்தில் மேலும் வலியுறுத்த இருக்கிறார். (உ-எ)

## வேறுபாடு நிலை

புதுடில்லி, ஆக. 23
அரசு — கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் — அடிப்படை விஷயங்களில் முக்கிய அம்சங்களில் இன்னும் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவந்திருக்கின்றது.

ஆனால் இரண்டு வாரங்களில் அரசுக்கும் — கூட்டணிக்கும் இடையே உடன்பாடு ஏற்படக்கூடும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா அமைச்சரவைக் கூட்டத்தில் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

இப்படி 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது (உ-எ)

# மட்டக்களப்பில் தேடுதல் 250 பேர் விசாரணையில்

மட்டக்களப்பு, ஆக 24
மட்டக்களப்பு மாவட்டத்தில் மாமாங்கம், புன்னைச்சோலை, அமிர்தகழி, ராஜதுரைபுரம் ஆகிய இடங்களில் ஆயுதப் படையினர் நேற்று தேடுதல் நடத்தி 250-க்கும் அதிகமானவர்களை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்

காலை ஐந்தரை மணி தொடக்கம் நண்பகல் வரை இடம்பெற்ற தேடுதலில் 500-க்கு அதிகமான சிப்பாய்கள் ஈடுபட்டனர்.

தேடுதலின்போது புதைத்து வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றையும் உருக்குலைந்த நிலையிலான மனித எலும்புக் கூடு ஒன்றையும் படையினர் தோண்டி எடுத்தனர்.

பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பஞ்சலிங்கம் எலும்புக்கூடு ஒரு மாதத்துக்கு முன் இறந்த ஒருவருடையது என்று தெரிவித்தார். (உ-ஈ-21)

## சிங்கள விவசாயி பலி

கொழும்பு, ஆக 24
பொலன்னறுவை மாவட்டத்தில் சோமாவதிய என்னும் இடத்தில் இனந்தெரியாத இளைஞர்கள் ஒரு சிங்கள விவசாயியைச் சுட்டுக் கொலை செய்தனர் என்றும் இன்னும் 2 பேரைக் கடத்திச் சென்றனர் என்றும் அறிவிக்கப்படுகின்றது (உ-எ)

## கருப்பையில் குழந்தைக்கு சத்திரசிகிச்சை

பாண்டிச்சேரி, ஆக 24
தாயின் கருப்பையில் இருக்கும் இரட்டைக் குழந்தைகளின் மூளையில் சத்திரசிகிச்சை செய்து சாதனை ஒன்றை அமெரிக்க சர்ஜன்கள் நிகழ்த்தினர்.

கருப்பையில் வைத்தே குழந்தைகளின் மூளையில் இருந்த மேலதிக நீரை வைத்திய நிபுணர்கள் வெற்றிகரமாக வெளியேற்றினர்

6 வாரங்களின் முன்னதாகவே இரண்டு குழந்தைகளும் சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் பின்னர் பிறக்க வைக்கப்பட்டன.

## தவறிவிட்டது

ரெம்பிள் ரோட் சந்திக்கும் புகையிரத நிலைய சந்திக்கும் இடையில் பச்சைநிற காஞ்சிபுர சேலை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்காணும் முகவரியில் ஒப்படைத்து சன்மானத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி யோண்
148/12 புகையிரத நிலைய வீதி,
யாழ்நகர்.

### தமிழ்ப் போராளிகளின்

## சிங்கள ஆதரவாளர் குடும்பத்தோடு கைது

கொழும்பு ஆக. 24
ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்து வடபகுதி தீவிரவாதிகளுடன் இணைந்து செயல்படுவதாகக் கூறப்படும் "ஜனதா சங்கமய" என்ற பிரிவின் தலைவர், அவரின் மனைவி, மகன் ஆகியோரைப் பொலீஸார் கைதுசெய்ததாக அறிவிக்கப்படுகிறது.

சிவேர்ஸன், ஈழம் பிரசுரங்கள், ஈழம் ஒலிபரப்பு சேவைக்குப் பயன்படுத்தத் தயாரிக்கப்பட்ட பிரசுரங்கள் அப்போது கைப்பற்றப்பட்டன என்றும் சொல்லப்பட்டது

எனினும் கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்களை வெளியிட பொலீஸார் மறுத்துவிட்டனர். (உ-எ)

விரையுங்கள்!
பரிசு வெல்லுங்கள்!!

## உதயன் - சஞ்சீவி
நல்லூர் உற்சவகால

## அறிவுப் போட்டி

1 இப்போட்டியில் உதயன் - சஞ்சீவி வாசகர்கள் எவரும் பங்குபற்றலாம்.

2 கீழே காணப்படும் விறப் படிவத்தைப் பூர்த்திசெய்து, நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டிக்குள் இடவேண்டும்.

3 போட்டி முடிவு திகதி: 01-09-1986

4 சரியான விடைகள் எழுதியவர்களின் படிவங்கள் தெரிவுசெய்யப்பட்டு, தீர்த்தோற்சவமான 03-09-86 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆதீனத்தில் வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அங்கு வைத்தே உடன் பரிசுகள் வழங்கப்படும்

5 பரிசுகள்; வெகுமதிக்க 5 பரிசுகளும், ஆறுதல் பரிசுகளும் உண்டு.

6. போட்டியாளர் பெயர்:

முகவரி:

கையொப்பம்:

7. விளுப்படிவம் II

1. "திருமுருகாற்றுப்படை" யாரால் பாடப்பெற்றது?

2. நல்லூர்க் கோயிலின் அருகில் அமைந்துள்ள மடங்கள் இரண்டின் பெயரைக் கூறுக.

3. "கார்த்திகேயன்" என்ற பெயர் முருகப்பெருமானுக்கு ஏற்பட்டதன் காரணத்தைக் கூறுக

4. தெய்வயானை திருமணம் எங்கு நடைபெற்றது?

5. தற்பொழுது உள்ள நல்லூர்க் கோயிலைக் கட்டியவர் யார்?

6 எத்தனையாம் திருவிழாவன்று நல்லூர் முருகப்பெருமான் சுவாமி வாகனத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவார்?

7. நல்லூர்க் கோயில் மூலஸ்தானம் கருங்கல்லால் கட்டப்பெற்று, கும்பாபிஷேகம் எந்த ஆண்டு நடைபெற்றது?

8. முருகப்பெருமான் திருக்கரத்தில் இருக்கும் வேல் எதைக் குறிக்கிறது?

9. முருகப்பெருமானுக்குரிய விரதங்கள் இரண்டைக் கூறுக.

10. நல்லூர்க்கோயிலை முதன்முதலாக ஸ்தாபித்தவர் யார்?

## உதயன் - சஞ்சீவி
### சந்தா விவரம்
உள்நாடு

| காலம் | உதயன் | சஞ்சீவி | உதயனும் சஞ்சீவியும் |
|---|---|---|---|
| | ரு ச | ரு ச. | ரு ச. |
| ஒரு வருடம் | 313-00 | 104 00 | 417.00 |
| 06 மாதம் | 156-50 | 52-00 | 208 50 |
| 03 மாதம் | 78 50 | 26-00 | 104 50 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | ரு ச | ரு ச | ரு ச. |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 469-50 | 156-00 | 625-50 |
| 06 மாதம் | 234-75 | 78-00 | 312-75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விவரங்கள் மாற்றத்திற்குரியவை

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கையில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 24 — 08 — 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 1, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 60 N 88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org